In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.1 |
| Name: Gobi | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 20-01-2025.

**(Accused present.)**

முதல் விசாரணை :-

நான் நிலக்கோட்டை தாலுகா, மாவூத்தன்பட்டியில் வசிக்கிறேன். என்னுடன் பிறந்தவர்கள் செண்பகராஜன் மற்றும் நாகசெல்வம் ஆவார்கள். இந்த வழக்கில் இறந்தவர் செண்பகராஜன். எனது அண்ணன் செண்பகராஜன் கொடைரோட்டில் எதிரி ராம்குமாருக்கு பாத்தியப்பட்ட மனமகழ்மன்றத்தில் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கின் இறந்துபோன 2ம் எதிரி செந்தில்குமார் 1ம் எதிரி ராம்குமாரின் மனமகழ்மன்றத்தில் வேலை பார்த்து வந்தவர். எதிரி ராம்குமார் எனது சகோதரர் செண்பகராஜன் வேலை பார்த்து வந்ததற்கான சம்பளத்தை கொடுக்கவில்லை. எனது சகோதரர் செண்பகராஜன், ராம்குமாரிடம் பணம் கேட்டு 17.05.2020ம் தேதி இரவு 1.30 மணிக்கு சம்பள பணத்தைக் கேட்டு மனமகழ்மன்றத்திற்கு சென்றார். எனது அண்ணி எனது அண்ணன் தனியாக போவதாகவும் என்னையும் உடன் போகுமாறு சொன்னார். அதனால் நான் அண்ணனை தொடர்ந்து பின்னால் சென்றேன். என் அண்ணன் செண்பகராஜன் கிளப்பிற்கு வெளியே வைத்து எதிரி ராம்குமாரிடம் சம்பள பணத்தைக் கேட்டார். கேட்ட இடத்தில் எதிரி ராம்குமார் நான் எதற்கு சம்பளம் கொடுக்கவேண்டும் என அசிங்கமாக என் அண்ணனை திட்டினார். அதில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. உடனே

எதிரி ராம்குமார் கிளப்பிற்குள் சென்று கத்தியை எடுத்து என் அண்ணனை இடதுபக்க அல்லையில் குத்திவிட்டார். அப்போது அந்த இடத்தில் இருந்த எதிரி செந்தில்குமாரும் ராம்குமாருடன் சேர்ந்துகொண்டு அங்கு கிடந்த குவார்ட்டர் காலிபாட்டிலை எடுத்து என் அண்ணனின் மண்டையில் அடித்துவிட்டார்கள். அப்போது நான் நான்குவழிச்சாலையில் எதிர்த்தார்போல் வாகனங்கள் சென்று கொண்டிருந்ததால் நின்று நடந்ததை பார்த்தேன். நான் போவதற்குள் அவர்கள் ஓடிவிட்டார்கள். என் அண்ணன் இரத்தவெள்ளத்தில் கிடந்தார். அப்போது எனது சித்தப்பா இளையராஜா எதார்த்தமாக அந்த பக்கமாக வந்தவர் பார்த்துவிட்டு 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார். 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் என் அண்ணனை அதில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது. போலீசார் அங்கு வந்து என் அண்ணனையும் என்னையும் விசாரித்தார்கள். என் அண்ணனிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். என் அண்ணன் அதில் ராஜா என கையெழுத்து போட்டார். அதில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வாக்குமூலத்தில் உள்ள ராஜா என்ற கையெழுத்து என் அண்ணனுடைய கையெழுத்துத்தான். பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு என் அண்ணனை அனுப்பி வைத்தார்கள். பின்னர் சிகிச்சை பலனின்றி 10 நாட்கள் கழித்து என் அண்ணன் இறந்துவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியைக்கொண்டுதான் எதிரி ராம்குமார் என் அண்ணனை குத்தினார். அந்த கத்தி சாபொ.1. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.01.20 16:58:34 +0530

Principal District Judge,
Dindigul.